# DIOCESE OF KOTTAR

**Most Rev. Nazarene Soosai** Th. D.,D.D.
Bishop of Kottar

Bishop's House, P.B. No:17,
Asaripallam Road, Nagercoil - 629 001.
Kanniyakumari District, Tamil Nadu, India.
Off : +91 - 4652-278343, 279152, 279933
Per : +91 - 4652-278868
E-mail : nazarene13@gmail.com

No. C-17 /2020

26.06.2020

## அகில உலக சமூகத் தொடர்பு நாள்
## ஜூலை 12, 2020

இறை இயேசுவில் அன்பிற்கினியவர்களே!

இறைத்தந்தையின் ஊடகமாம் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அன்பும் அமைதியும் உங்களுக்கு உரித்தாகுக!

எதிர்வரும் **ஜூலை 12, 2020 ஞாயிறன்று நம் தாய் திருஅவை 54வது அகில உலக சமூகத் தொடர்பு நாளைச் சிறப்பிக்கின்றது**. இதனையொட்டி நம் திருதந்தை பிரான்சிஸ் அவர்கள், "நான் செய்த அருஞ்செயல்கள் பற்றி நீ உன் மக்களுக்கும் உன் மக்களின் மக்களுக்கும் விவரித்துச் சொல்"' (விப 10:2) என்ற இறைச் சொற்றொடரின் அடியொற்றி 'வாழ்வு வரலாறு ஆகிறது' என்னும் மையப்பொருளில் விடுத்துள்ள செய்தியைச் சற்று உங்களோடு பகிர்ந்திட விழைகின்றேன்.

ஒரு தனி மனிதரின், குடும்பத்தின், அமைப்பின், நாட்டின், வாழ்வில் நிகழும் நிகழ்வுகளை உரிய முறையில் தொடர்புபடுத்தி விவரித்துக் கூறுவது 'கதைச் சொல்லுதல்' எனப்படுகிறது. இத்தகைய விவரிப்புகள் காலப்போக்கில் தொகுக்கப்பட்டு பாதுகாக்கப்படும்போது 'வரலாறு' ஆகிறது. இவ்வாறு நடக்கின்ற நிகழ்வுகளை விவரித்துக் கூறுவதும் அதைப் பிறருக்கு வாய்மொழியாகவும் ஊடகங்கள் வழியாகவும் அறிவிப்பது 'சமூகத் தொடர்பு' என்றழைக்கப்படுகிறது. இந்தச் செயல்முறையில் ஊடகம் மற்றும் விவரிக்கும் விதம் அனைத்தும் முக்கியமானவை என்றாலும், செய்திகளுக்குக் கருவாக அமைவது நிகழ்வுகளின் விவரிப்பாகிய கதைகளே. ஊடகங்கள் மனிதரிலும் உலகத்திலும் மிகுந்த தாக்கத்தினை ஏற்படுத்தி வரும் இக்காலத்தில் கதைச் சொல்லுவதன் முக்கியத்துவத்தைப் பற்றி சிந்திப்பது தேவையாகிறது.

கிறிஸ்தவர்களின் புனித நூலாகிய திருவிவிலியத்தை 'கதைகளின் கதை' எனலாம். கடவுள் மனிதர்மீது கொண்டிருக்கும் பேரன்பை எல்லாக் காலங்களிலும் மனிதருக்கு விவரித்துக் கூறுகிறது திருவிவிலியம். தூய ஆவியாரே அந்தக் கதைகளின் விவரிப்பாளர். இப்பெருங்கதையின் நடுநாயகன் இயேசு கிறிஸ்துவே! அவரே கதைக் கருவும் கதைச் சொல்பவரும் கதையின் இலக்குமாவார். அவர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் பல கதைகள், உவமைகள், உருவகங்கள் மற்றும் வரலாற்று நிகழ்வுகள் வழியாகக் கடவுளின் பேரன்பை மனிதருக்கு வெளிப்படுத்தும் விவரிப்பாளராகவே இருந்தார். இதனால் இயேசு வரலாற்றிலேயே மிகச் சிறந்த கதைச் சொல்லியாகவும் திகழ்ந்தார்.

அவரது கதை அவர் நமக்கு விட்டுச்சென்ற நற்செய்தி ஆகும். தன் விண்ணேற்றத்தின் போது "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற் 16:15); "இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" (மத் 28:20) என இயேசு கூறியதன் மூலம் இந்தக் கதை அன்று முதல் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாறி வருகின்ற காலத்திற்கேற்ப நம் வார்த்தைகளாலும் வாழ்க்கை முறையாலும் அன்றாடச் செயல்களாலும் பல்வேறு ஊடகங்கள் வழியாகவும் இந்தக் கதையைச் சொல்ல இறைவன் நம்மை அழைக்கிறார். இயேசுவின் கதையை நம் அன்றாட வாழ்வில் நம் கதையாக்கி நமது வருங்கால தலைமுறையினருக்கும் அவற்றை எடுத்துச் சொல்பவர்களாக நாம் வாழ வேண்டும் என்பதே அந்த அழைப்பு.

.....2.

# DIOCESE OF KOTTAR

**Most Rev. Nazarene Soosai** Th. D.,D.D.
Bishop of Kottar

Bishop's House, P.B. No:17,
Asaripallam Road, Nagercoil - 629 001.
Kanniyakumari District, Tamil Nadu, India.
Off : +91 - 4652-278343, 279152, 279933
Per : +91 - 4652-278868
E-mail : nazarene13@gmail.com




நாம் திருவிவிலியத்தையோ புனிதர்களின் வரலாற்றையோ பிற புனித நூல்களையோ வாசிக்கும்போது, அவற்றின் ஒளியில் தூய ஆவியாரே நம்முடைய உள்ளத்தில் கடவுளின் அன்பினைத் தூண்டிவிடுகிறார். அதனால் நம்மை அழுத்துகின்ற வருத்தத்திலும் துயரத்திலும் நாம் ஆழ்ந்துவிடாமல், கடவுள் கூறிய கதையைப் பிறருக்கும் கூறுவோம். அந்தக் கதை கடவுள் நம்மையும் பிறரையும் என்றுமே அன்பு செய்கிறார் என்ற மையச் செய்தியையே கொண்டிருக்கிறது. இதனை நாம் தொடர்ந்தாற்ற "இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தம் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்துக் கொண்டிருந்த" (லூக் 2:19) புனித மரியாவை மாதிரியாகக் கொண்டு செயல்படுவோம்.

ஊடகத் துறையில் மாபெரும் புரட்சி ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில் நம் கோட்டாறு மறைமாவட்ட சமூகத் தொடர்புப் பணிக்குழு, "கலைவழி இறைமொழி" என்ற விருதுவாக்கோடு நாஞ்சில் நாதம் மற்றும் களரி மக்கள் பண்பாட்டு மையம் ஆகிய இரண்டு கலைவடிவங்களில் இறையாட்சியின் விழுமியங்களை நாடகங்கள், நடனங்கள், பல்சுவை நிகழ்ச்சிகள் வழியாக வளர்க்கின்றது. சிறார்கள் மற்றும் இளைஞர்களின் திறமைகளை வளர்க்க இசைப்பயிற்சி, இசைக்கருவிகள் மீட்டும் பயிற்சி, நடனப் பயிற்சிகள், ஊடகப் பயிற்சிகள் என்று பல பயிற்சிகளை நடத்துகின்றது. சென்ற ஆண்டு அக்டோபர் 26ஆம் தேதி முதல் நமது கோட்டாறு மறைமாவட்ட நாஞ்சில் நாதம் தொலைக்காட்சி TCCL 180-லும், AMN 818-லும் மற்றும் இணையதளத்திலும் சிறப்பாக நிகழ்வுகளை ஒளிபரப்பு செய்து வருகிறது. திருப்பலி, செபமாலை, நற்கருணை ஆசீர், இறைச்சிந்தனைகள், பக்திப்பாடல்கள் என்று ஆன்மீக நிகழ்வுகளையும் பணிக்குழுக்களின் அன்றாட நிகழ்வுகள் மற்றும் பயிற்சிகளையும் செய்தியாக நம் இல்லங்களுக்குக் கொண்டு வருகின்றது. மறைமாவட்டம் சார்ந்த நிகழ்வுகள் மற்றும் மறைமாவட்டச் செய்திகளை மக்களிடையே கொண்டு சேர்க்கும் இணையத்தின் ஊடகமாகவும் தொலைக்காட்சியாகவும் ஆன்மீக வளர்ச்சியை நம் மறைமாவட்டத்தில் உருவாக்கி வருகிறது. தொடர்ந்து இப்பணியைச் சிறப்பாக ஆற்றிட நாஞ்சில் நாதம் தொலைக்காட்சிக்கு நமது ஆதரவை அளிக்க கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும் தமிழகத் திருஅவை நடத்தி வரும் மாதா தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் பார்த்து பயன் பெறவும், "மாதம்தோறும் மாதாவுக்கு" என்கிற நன்கொடைத் திட்டத்தில் இணைந்து மாதா தொலைக்காட்சியை ஊக்கப்படுத்தவும் கேட்டுக் கொள்கின்றேன். சூலை 12 அகில உலக சமூகத் தொடர்பு நாளை ஒவ்வொரு பங்கிலும் சிறப்பித்து சமூகத் தொடர்பு சாதனங்களை இறைநம்பிக்கையையும் மீட்பின் வரலாற்றையும் வருகின்ற தலைமுறைக்குக் கொண்டு செல்லும் ஊடகமாகப் பயன்படுத்த அன்பாய் கேட்டுக்கொள்கிறேன். சூலை 12 காலை 11.00 மணிக்கு நமது நாஞ்சில் நாதம் தொலைக்காட்சியில் ஒளி பரப்பப்படும் ஊடகத்தின் முக்கியவத்துவத்தைப் பற்றிய சிறப்பு நிகழ்ச்சியைப் பார்த்து பயன்பெறவும் அன்பாய் கேட்டுக்கொள்கின்றேன்.

வரலாற்றையும் அன்றாடச் செய்திகளையும் பிறரிடம் கொண்டு சேர்க்கின்ற உயரியப் பணியைச் செய்துவரும் ஊடகங்களை நலமானவற்றுக்காக மட்டும் நாம் பயன்படுத்தி இறையாட்சி நம் நடுவில் உருவாக உழைத்திட இறைவன் அருள்கூர்வாராக!

கிறிஸ்துவின் மனநிலையில்

+ SNazareen

ஆயர் நசரேன் சூசை
கோட்டாறு ஆயர்

Most Rev. Nazarene Soosai ★ Bishop of Kottar ★


• Fax : +91 - 4652-278570 • E-mail :kottardiocese@yahoo.co.in • Website : www.kottardiocese.org